[2010 ஏப்ரல் 6

முற்பகல் *10-25*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு அவர்கள் தொடர்ந்து இந்தப் பேரவையிலே இந்தக் கேள்வியை எழுப்பி, நான் தொடர்ச்சியாக அவருக்கு இதே பதிலை சொல்லிக்கொண்டிருக்கிறேன். நான் மீண்டும் அவரிடத்திலே அதைத்தான் தெரிவிக்க விரும்புகிறேன். *1991* ஆம் ஆண்டுக்குப் பிறகு அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளிலே புதிதாக நியமிக்கப்பட்டிருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கு அரசு மானியம் வழங்க வேண்டுமென்று சொன்னால், அதற்கான நிதிச் சுமை ஏறத்தாழ *600* கோடி ரூபாய்க்கு மேலாக, தொடர் செலவினமாக Recurring Expenditure ஆக வரக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. அரசுக்கு ஒரு மிகப் பெரிய நிதிச் சுமையும், நிதிச் செலவினமும் அதில் இருக்கிறது. எனவே, *1991* ஆம் ஆண்டுக்குப் பிறகு நாம் எந்தப் பள்ளிக்கும் கூடுதலான பணியிடங்களை அரசு உதவியோடு தருவதில்லை என்பதை ஒரு கொள்கையாக வைத்திருக்கிறோம். தொடர்ச்சியாக வந்திருக்கக்கூடிய அரசுகளாலும், அதே முடிவுதான் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. எனவே, இதுகுறித்து ஒரு முடிவெடுக்க வேண்டுமென்று சொன்னால் நிதி நிலைமைக்கேற்ப நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கலந்துபேசி, ஆலோசித்து, அதற்குப் பிறகுதான் இதிலே முடிவெடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் *17*, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். குருசாமி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

17—

சாலை வசதி

***104535—திரு. எஸ்.எஸ். குருசாமி:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2010 ஏப்ரல் 6]

அந்தியூர் தொகுதி, வனத் துறையைச் சார்ந்த தாமரைக்கரை-மணியாச்சி, கொங்கடை ஊராட்சி சாலையைத் தார்ச் சாலையாக அமைக்கும் பணியை நிறைவேற்றித் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு திருத்திய விடையை அளிக்க விரும்புகிறேன்.

ஈரோடு மாவட்டம், அந்தியூர் தொகுதியில் தாமரைக்கரை முதல் கொங்கடை வரை உள்ள சாலையின் மொத்த நீளம் 22 கிலோ மீட்டர் ஆகும். அதன் விவரம் வருமாறு:-

தாமரைக்கரை முதல் தாளக்கரை வரை 7 கிலோ மீட்டர் நீளமும், தாளக்கரை முதல் மணியாச்சி வரை 3 கிலோ மீட்டர் நீளமும், மணியாச்சி முதல் கோவில் நத்தம் வரை 7 கிலோ மீட்டர் நீளமும், கோவில் நத்தம் முதல் கொங்கடை வரை 5 கிலோ மீட்டர் நீளமும் ஆக மொத்தம், 22 கிலோ மீட்டர் நீளம் உள்ளது. இதில் தாமரைக்கரை-தாளக்கரை-மணியாச்சி மற்றும் மணியாச்சி முதல் கோவில் நத்தம் வரை உள்ள 17 கிலோ மீட்டர் சாலையில் 14 கிலோ மீட்டர் நீளத்திற்குரிய சாலை காப்புக்காட்டின் ஊடே செல்கிறது. மீதமுள்ள 8 கிலோ மீட்டர் சாலை, வனத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லை. வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சாலையைப் பராமரிப்பதற்கோ தார்ச் சாலையாக மாற்றுவதற்கோ ஊராட்சி ஒன்றியத்திலிருந்து இதுவரை எந்தக் கருத்துருவும் பெறப்படவில்லை என்று ஈரோடு மாவட்ட வன அலுவலர் தெரிவித்துள்ளார். ஊராட்சி ஒன்றியத்திலிருந்து தகுந்த கருத்துரு பெறப்பட்டால், வனப் பாதுகாப்புச் சட்டம் 1980-க்குட்பட்டு மேற்கண்ட சாலையைத் தார்ச் சாலையாக மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். குருசாமி.

திரு. எஸ்.எஸ். குருசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே மிகச் சிறந்த பசுமைக் கட்டடமான இந்தப் பேரவையில் மிக மிகச் சாமானியனான எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும்,

மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும், தங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வினாவானது குறுகிய கால வினாவாக மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் அனுமதியோடு போடப்பட்டு, பதில் வருவதற்கு முன், கூட்டத்தொடர் முடிந்து விட்டது. அதே வாரத்தில், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள், அந்தியூருக்கு வருகை தந்து, இந்தப் பணியைத் தொடங்குவதற்குரிய நடவடிக்கையை எடுத்து, பணியும் கிழக்கு மலைப் பகுதியில் தொடங்கப்பட்டுள்ளது. அதற்காக வனத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், தாமரைக்கரை முதல் கொங்கடை வரை செல்லும் சாலை PMGSY திட்டத்தின்மூலமாக மேற்கொள்ளப்பட்டு வேலை நடந்து கொண்டிருக்கிறது.

முற்பகல் *10-30*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. எஸ்.எஸ். குருசாமி: அந்தப் பணிகள் நடைபெறும் சாலையானது, *0-0-10.66* கிலோ மீட்டரிலும், *11.245* கிலோ மீட்டர் முதல் *11.755* கிலோ மீட்டர் வரையிலும், *11.955* கிலோ மீட்டர் முதல் *13.545* கிலோ மீட்டர் வரையிலும், *17.045* கிலோ மீட்டர் முதல் *17.100* கிலோ மீட்டர் வரையிலும், *18.03* கிலோ மீட்டர் முதல் *18.30* கிலோ மீட்டர் வரையிலும் வனத் துறை சாலை உள்ளது. இந்த வனத் துறை சாலை மட்டுமல்லாது, அந்தியூர்-பர்கூர் முதல் சுண்டப்பூர் வரையுள்ள சாலையின் நீளம் மொத்தம் *7* கிலோ மீட்டர். அந்த *7* கிலோ மீட்டரில் வனத் துறை சாலையாக *5* கிலோ மீட்டரும், ஒன்றியச் சாலையாக *2* கிலோ மீட்டரும் உள்ளது. பர்கூர்-கற்கைகண்டி முதல் பேளம்பட்டி வரை *15* கிலோ மீட்டர் வனச் சாலையாகவும், பர்கூர்-துரிசனம்பாளையம் சாலை முதல் சோளகரை வரை *16* கிலோ மீட்டர் வனச் சாலையாகவும், தார்க்காடு முதல் கத்திரிமலை வரை *10* கிலோ மீட்டர் வனச் சாலையாகவும், கோவில்நத்தம் முதல் பெரியசிங்களம் வரை *7* கிலோ மீட்டர் சாலையும், தாமரைக்கரை-கொங்காடு முதல் தொள்ளி வரை *3* கிலோ மீட்டர் சாலையும், முழுவதும் வனத் துறையைச் சார்ந்த சாலையாகவும் இருப்பதால், அங்கிருக்கின்ற மலைவாழ் மக்கள் நடந்தே செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இதிலே, யானைகள் மற்ற மிருகங்கள் அதிகமாக நடமாடக்கூடிய பகுதியில் மலைவாழ் மக்கள் நடந்தே

2010 ஏப்ரல் 6]

வரக்கூடிய இந்தச் சாலைகளை தார்ச் சாலைகளாக அமைத்துக் கொடுத்தால் மக்களுக்குப் பயன்படும். ஆகவே, அரசு அதற்கு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வனத் துறையின் சார்பாகப் பணிகள் மேற்கொள்ளப்படுவதைச் சுட்டிக்காட்டினார்கள். அவர் சுட்டிக்காட்டியுள்ள பல பகுதிகள் மலைப் பகுதிகளாகும். அங்கே மலைவாழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், அனுமதிக்கப்பட்ட வழித் தடம் என்று சில இடங்களில் 2 மீட்டர் அகலம், 3 மீட்டர் அகலம், 4 மீட்டர் அகலம் என்று இருக்கிறது. சாலை அமைக்க வேண்டுமென்றால், 7 மீட்டர் அகலத்திற்கு இடம் வேண்டுமென்று மாவட்ட ஆட்சியர் மற்றும் துறை அலுவலர்கள் கேட்கிறார்கள். ஆனால், இன்றுள்ள வனப் பாதுகாப்புச் சட்டம் இதற்கெல்லாம் இடம் தருவதில்லை. அதுவும் இன்றுள்ள சூழ்நிலையில் வனம் மிக முக்கியமானதாக உலக அளவிலும், இந்திய அளவிலும், தமிழ்நாடு அளவிலும் கருதப்படுகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகு, மக்களுடைய நலனைக் கருத்தில்கொண்டு, எங்கெங்கு சாலை அமைக்க முடியுமோ அங்கெல்லாம் சாலை அமைப்பதற்கு அனுமதி தந்து, உத்தரவு வழங்கி, சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஓர் ஒப்பீட்டிற்குச் சொல்ல வேண்டுமேயானால், கடந்த கால ஆட்சியில், முன்பு நடந்த ஆட்சியில், ஐந்தாண்டுக் காலத்திலே 120 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை, 14 கோடியே, 65 இலட்சத்து, 34 ஆயிரம் ரூபாய் செலவிலே அமைத்திருந்தார்கள். ஆனால், கடந்த நான்காண்டுக் காலத்திலே, தலைவர் கலைஞர் அவர்கள் நிதி ஒதுக்கித் தந்து, 407 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை, 29 கோடியே, 94 இலட்சத்து, 89 ஆயிரம் ரூபாய் செலவிலே அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே, எங்கெங்கு சாலைகள் அமைக்க முடியுமோ, வனப் பாதுகாப்புச் சட்டம் அனுமதி தருகிறதோ, அந்த இடங்களிலெல்லாம் சாலைகள் அமைக்கப்படுகின்றன. மிக முக்கியமான இடம் என்றால், அந்தந்த பகுதியிலே வனப்

[2010 ஏப்ரல் 6

பகுதியிலே சாலைகள் வேண்டுமென்றால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் மாவட்ட ஆட்சியரை அணுகி, அங்கே சில படிவங்கள் இருக்கின்றன; அந்தப் படிவங்களிலே உள்ள வரைமுறைகளைக் கடைப்பிடித்து, ஒரு ஏக்கர் நிலம் வேண்டுமென்றால், இரண்டு ஏக்கர் நிலம் தர வேண்டும்; அதிலே காடு வளர்ப்பதற்குப் பணம் தர வேண்டும்; அந்த நிலத்திற்கான கிரயம் தர வேண்டும், இதைத் தவிர வேறு இடம் இல்லை என்று சான்றிதழ் தர வேண்டும்; இவற்றையெல்லாம் தந்து அந்தக் கருத்துருவை அனுப்பினால், ஒரு ஹெக்டேர் நிலம் என்றால், தமிழ்நாடு அரசே அதற்கு அனுமதி வழங்கிவிடலாம். ஐந்து ஹெக்டேர் வரை நிலம் வேண்டுமென்றால் பெங்களூருவிலே மத்திய அரசினுடைய அலுவலகம் இருக்கிறது. அதற்கு அவர்கள் அனுமதி வழங்க வேண்டும். ஐந்து ஹெக்டேர் நிலத்திற்கு மேல் வேண்டுமென்றால், எந்தப் பணிக்காக இருந்தாலும், அது மத்திய அரசுக்குச் சென்று, அந்த அமைச்சருடைய ஒப்புதலைப் பெற வேண்டும். பொதுவாக வனத் துறையிலிருந்து மாற்றுவதற்கு, சாலைகள், மருத்துவமனைகள், பள்ளிக்கூடங்கள், அதைப்போல, நீர்நிலைகளிலிருந்து பைப் அமைப்பது, மின்சாரக் கம்பி அமைப்பது, அதைப்போல தொலைபேசி இணைப்பிற்குக் கம்பி அமைப்பது போன்ற முக்கியப் பணிகளுக்கு மட்டும் அனுமதி வழங்குவதிலே தடையில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். குருசாமி.

திரு. எஸ்.எஸ். குருசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல, மாவட்ட ஆட்சியரை அணுகி, அதற்கான நடவடிக்கையை அடியேன் மேற்கொள்வேன் என்பதைத் தெரிவித்துக்கொள்வதுடன், அரசு அதற்குரிய துரித நடவடிக்கையை எடுக்குமா என்பதையும் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருத்துரு பெறப்பட்டால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.